தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தகிக்கும் வெயில்: வேலூரில் 102 டிகிரி



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் வெள்ளிக்கிழமை 102 டிகிரி வெயில் பதிவானது.

மதுரை, சேலம், திருச்சி, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 100 டிகிரிக்கு மேல்

வெயில் பதிவானது.

வெள்ளிக்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

வேலூர் - 102, மதுரை, சேலம்,

திருச்சி, திருப்பத்தூர் - 101

சென்னை மீனம்பாக்கம், தருமபுரி,

கரூர் பரமத்தி - 99, சென்னை

நுங்கம்பாக்கம் - 97, கோவை -96,

கடலூர், புதுச்சேரி – 94

**வேளாண் பல்கலை.யில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு பயிற்சி**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

இதில் வேளாண் கல்வி, வேளாண் ஆராய்ச்சி, தோட்டக் கலை மேம்பாடு, நெல், சிறுதானியம், பயறு வகைப் பயிர்கள், நீர் நிர்வாகம், இ-விரிவாக்கம், நானோ தொழில்நுட்பம் மற்றும் பண்ணை தொழில்நுட்பங்களில் நவீன முன்னேற்றங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி, தமிழக கடலோர பாதுகாப்புப் படை கூடுதல் டி.ஜி.பி. சி.சைலேந்திரபாபு, பல்கலைக்கழக பயிற்சித் துறை விரிவாக்க கல்வி இயக்கக பேராசிரியர் ஹெ.பிலிப் உள்ளிட்டோர் பயிற்சி அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

**ஏப் 7 இல் தேனீ வளர்ப்பு பயிற்சி**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேனீ வளர்ப்புப் பயிற்சி ஏப்.7 ஆம் தேதி நடைபெறுகிறது.

இதில் தேனீ இனங்களை கண்டுபிடித்தல், பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம், தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம், தேனைப் பிரித்தெடுத்தல், தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம் குறித்து பயிற்சி வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி நாள் காலை 9 மணிக்குள்ளாக வேளாண் பூச்சியியல் துறைக்கு தங்கள் சொந்த செலவில் வந்து சேரவேண்டும். பயிற்சியில் கலந்து கொள்ள ரூ.250 நேரடியாக செலுத்த வேண்டும். காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சி நடைபெறும். மேலும் விவரங்களுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பூச்சியியல் துறைத் தலைவரை 0422-6611214 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலையில் மாற்றமில்லை**

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

வியாழக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் வெள்ளிக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 52.06 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 52.06 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 584 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 4.9 டி.எம்.சி.

**வெயிலின் தாக்கம் அதிகரித்து காற்றின் வேகம் குறையும்**

**நாமக்கல்,**

தற்போதைய வானிலை அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காற்றின் வேகம் குறைந்திருக்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (மார்ச் 29 முதல் ஏப்ரல் 1-ஆம் தேதி வரை) வானம் தெளிவானதாகவும், மழைக்கான வாய்ப்பின்றியும்

காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 5 கிமீ வேகத்தில் தென்கிழக்கு மற்றும் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 68 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 102.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 14 சதம் முதல் அதிகபட்சம் 75 சதம் வரை இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு..: வெயிலின் தாக்கம் 98.6 முதல் 102.2 டிகிரி பாரன்ஹீட் வரை நிலவினாலும், காற்றின் வேகம் சற்று குறைந்து காணப்படும் என்பதால், கோழிகளிடையே வெப்ப அயற்சி அதிகளவில் இருக்காது.

இதனால், தீவன எடுப்பு குறையக் குறைய முட்டையின் உற்பத்தி, முட்டையின் எடை அதிகமாக வாய்ப்புள்ளது. தவிர, கோழிகளிடம் வெப்ப அளவுகள் உயர்ந்தே காணப்படும் என்பதால், நோய்களுக்கான எதிர்ப்புத் திறன் குறிப்பாக ராணிக்கெட் நோயின் எதிர்ப்புத் திறன் குறையும். இதை நிவர்த்தி செய்ய நோயின் எதிர்ப்புத் திறனை அளவீடு செய்து தடுக்கும் வியூகத்தை செயல்படுத்த வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி, ராணிக்கெட் நோய்களால் இறந்திருப்பது தெரியவந்துள்ளது.

எனவே, பண்ணையாளர்கள் ராணிக்கெட் நோய்க்கான எதிர்ப்புத் திறனை ஆய்வு செய்து அதற்கேற்ப நோய் தடுப்பூசி அளிக்க வேண்டும். கோடைகால பராமரிப்பு முறைகளை மேற்கொள்வதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைபிடிக்க வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: கோடை வெயில் காரணமாக நாட்டுக்கோழிகளிடையே கோழி அம்மை நோய் தாக்க வாய்ப்புள்ளது. இந்நோய் பாதித்த கோழிகளுக்கு கண், கொண்டை, நாசிப்பகுதி, செவிமடல் ஆகிய இடங்களில் அம்மை கொப்புளங்கள் ஏற்படக்கூடும். இதனால், தீவனம் உள்கொள்ளாமல் கோழிகளில் இறக்க வாய்ப்புள்ளது. இந்த நோயைத் தடுக்க 6 வார வயதில் கோழி அம்மை தடுப்பூசி போட வேண்டும். வறட்சி, அதிக வெப்ப நிலை காலங்களில் மரவள்ளியில் செம்பேன் தாக்குதல் அதிகரித்து 20 முதல் 33 சதவீத மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன. இந்த செம்பேன் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஓமைட் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு .05 மிலி வீதம் ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் அறிவியல் நிலையத்தில்மா கன்றுகள், சம்பங்கி விதைகள் விற்பனை**

**நாமக்கல்,**

மா கன்றுகள், சம்பங்கி விதை கிழங்கு ரகங்கள் ஆகியவை நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந், பெங்களூரா, சேலம் பெங்களூரா, நீலம் போன்ற மா கன்று ரகங்கள் நடவு செய்வதற்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு தயாராக உள்ளன. தவிர, காய்கறி விதைகளான தக்காளி, புடலை, பாகல், பூசணி, பரங்கி, சிறுகீரை, தண்டுக்கீரை, செடிமுருங்கை, செடி அவரை விதைகள், சம்பங்கி விதை கிழங்கு ரகங்கள், பிரஜ்வல் ஆகியவையும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நடவு செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு 04286 266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கள்ளக்குறிச்சியில் குளிர்ச்சி தரும் வெள்ளரிக்காய் விற்பனை ஜோர்**

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி பகுதியில் குளிர்ச்சி தரும் வெள்ளரிக்காய் விற்பனை சூடு பிடித்துள்ளது. கள்ளக்குறிச்சி பஸ் நிலையத்தில் பைக் மற்றும் சைக்கிள்களில் வைத்தும், கூடைகளில் தலைகளில் ஏந்தியும் வெள்ளரிக்காய் அதிகளவில் விற்கின்றனர். சிறிய காய் 5 ரூபாய்க்கும், மீடியம் மற்றும் பெரிய சைஸ் காய்கள் 7 முதல் 8 ரூபாய் வரை விற்பனையாகிறது. உள்ளூர் பகுதிகளில் இருந்து வெள்ளரிக் காய்கள் கிடைப்பதால், அதிகளவு வியாபாரிகள் விற்கின்றனர். வெயிலும்

அதிகமாக இருப்பதால், வெளியூர் பயணிகளும் மற்றும் உள்ளூர் பொதுமக்களும், உடலுக்கு குளிர்ச்சி தரும் தன்மை கொண்ட இதனை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

## முட்டை விலை நிர்ணயத்தில் "நிக்' கெடுபிடி ஊர் ஊருக்கு உருவாகுது வியாபாரிகள் சங்கம்

**நாமக்கல்**: நாமக்கல் மண்டல முட்டை பண்ணையாளர்கள், "நிக்' நிர்ணயக்கும் விலையை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என வலியுத்தப்பட்டதால், வியாபாரிகள் மற்றும் விற்பனையாளர்கள், ஊர் ஊருக்கு தனியாக சங்கங்களை வைத்து, அவரவர் விருப்பத்திற்கு ஏற்றாற்போல், முட்டை விலை நிர்ணயம் செய்து வருகின்றனர்.

தேசிய அளவில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், அதிகபட்சமாக ஆந்திரா, தமிழகம், மகாராஷ்ட்ரா, ஹரியானா, பஞ்சாப், மேற்குவங்கம், கர்நாடகா, கேரளா, ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் செயல்படும், 24 மண்டல கமிட்டிகள், தினசரி விலை நிர்ணயத்தை நிர்ணயிக்கின்றன. நாமக்கல் முட்டை மண்டலம் தவிர, மற்ற மண்டலங்களில், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு கமிட்டி (நிக்) நிர்ணயக்கும் விலையை, வியாபாரிகள் பின்பற்றி வருகின்றனர்.

ஆனால், நாமக்கல் மண்டலத்தில் மட்டும், சில பண்ணையாளர்களின் வியாபார ஆசை மற்றும் வியாபாரிகளின் ஆதிக்கத்தால், "நிக்' நிர்ணயிக்கும் விலையை காட்டிலும், குறைந்த விலைக்கு பண்ணையில் வாங்கிச் சென்று, வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்பர். அதில், நாமக்கல் மண்டலத்தில் மட்டும், தினமும் உற்பத்தி செய்யப்படும், மூன்று கோடி முட்டைகளில், 80 லட்சம் முட்டை கேரளா, 80 லட்சம் முட்டை உள்ளூர் விற்பனை, 70 லட்சம் முட்டை அரசின் சத்துணவுத் திட்டம், மீதமுள்ள, 70 லட்சம் முட்டை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நாமக்கல், "நிக்' நிர்ணயம் செய்யும், பண்ணை மற்றும் கொள்முதல் விலையில், பல்வேறு குளறுபடிகள் இருந்ததால், கடந்த, ஜனவரி மாதம் முதல், பண்ணையாளர்கள், "நிக்' நிர்ணயிக்கும் விலைக்குத் தான் முட்டையை விற்க வேண்டும். குறைந்த விலைக்கு விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என, "நிக்' அறிவித்து, அதனை கண்காணிக்க குழு அமைத்தது. அதனால், வியாபாரிகள் வேறு வழியில்லாமல், "நிக்' நிர்ணயக்கும் விலைக்கே முட்டையை வாங்கும் நிலைக்கு

தள்ளப்பட்டனர். கோழியின் முதல் முட்டை போடும் பருவத்தில் இருந்து, குறைந்தபட்சம், 40 கிராம் புல்லட் முட்டை, 40 - 45 கிராம், 45 - 50 கிராம், 50 - 52 கிராம் ஏற்றுமதி செய்யப்படும் முட்டை என, நான்கு விதமாக பிரிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

அதேபோல், பண்ணை விலை, கொள்முதல் விலை, கடைகளில் சில்லரை விற்பனை விலை, வியாபாரியின் லாப விலை என, மேலும், நான்கு விதமான கூடுதலாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மூன்று மாதங்களாக, வியாபாரிகளுக்கு கெடுபிடி நிலை ஏற்பட்டதால், அவரவர் மாவட்டத்திற்கு ஏற்றாற்போல், முட்டை விற்பனை விலையை, அவரவர் விருப்பத்திற்கு ஏற்றாற்போல், நிர்ணயம் செய்ய சங்கங்களை உருவாக்கி வருகின்றனர். சேலம் மாவட்ட முட்டை விற்பனையாளர் சங்க பொருளாளர் மகேஸ்குமார் கூறியதாவது: கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து, நாமக்கல் மண்டலத்தில் முட்டை எடுக்க முடியவில்லை. குறைத்து கொடுத்த பண்ணையாளர் தற்போது, "நிக்' நிர்ணயிக்கும் விலைக்கு கீழ் குறைத்து கொடுக்க மறுக்கின்றனர். அதனால், நாமக்கல்லில் வாங்கிய முட்டை, சேலத்தில் விற்கும் போது, "நிக்' விலையை காட்டிலும், 30 காசு கூட்டி விற்க உள்ளோம். அதே ரேட்டை அனைத்து வியாபாரி மற்றும் விற்பனையாளர் பின்பற்ற சங்கம் அமைத்துள்ளோம். எங்களை போன்று தமிழகத்தில் பல மாவட்டங்களில், சங்கம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரோஜா பூங்காவில் புதிய ரக ரோஜாக்கள் நடவு

**ஊட்டி** : ஊட்டி ரோஜா பூங்காவில், விரிவுப்படுத்தப்பட்ட பகுதியில், புதிய ரக ரோஜா செடிகள் நடவு செய்யும் பணி துவங்கியுள்ளது.ஊட்டி ரோஜா பூங்காவை, கோடை சீசனுக்கு தயார்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன. இந்தாண்டு, பூங்கா பயன்பாட்டுக்கு ஒன்றரை ஏக்கர் நிலம் விரிவுப்படுத்தப்பட்டு, அங்கு புதிய ரக ரோஜா செடிகள் நடவு செய்யும் பணி துவங்கியுள்ளது. பெங்களூருவில் இருந்து, 300 வகையைச் சேர்ந்த 2,000 ரோஜா செடிகள் தற்போது நடவு செய்யப்பட்டு வருகின்றன. "அடுத்த மாதம் கோடை சீசனுக்குள் அவை பூத்து, பார்வையார்களின் கண்களுக்கு விருந்தாக அமையும்' என, பூங்கா நிர்வாகத்தினர் கூறினர்.

### சரிந்தது முருங்கை விலை:ஒரு கிலோ இரண்டு ரூபாய்

**கரூர்**: கரூர் மாவட்டத்தில் முருங்கை உற்பத்தி அதிகரித்துள்ளதால், ஒரு கிலோ முருங்கை இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.அரவக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளான கொத்தப்பாளையம், தடா கோவில், வெஞ்சாங்கூடலூர், ஈசநத்தம், அம்மாப்பட்டி, ஊத்தூர், பெரியமஞ்சுவளி சேந்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார், 50,000 ஏக்கரில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

திரட்சியான தடிப்பான அரவக்குறிச்சியில் விளையும் ருசியான முருங்கைக்கு தமிழகம் மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலும் நல்ல வரவேற்புண்டு.

குறிப்பாக, சீஸன் காலங்களில் நாள்தோறும், 15 லாரி முதல், 25 லாரிகளின் அரவக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகளில் இருந்து டில்லி, மும்பை, பெங்களூரு, காக்கிநாடா, விசாகப்பட்டினம், கொச்சி, எர்ணாக்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால், தற்போது கரூர் மாவட்டத்தில் முருங்கை உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதனால், தற்போது, 20 காய்கள் கொண்ட ஒரு கட்டு முருங்கை விலை கடந்த நவம்பர் மாதம், 60 ரூபாய் முதல், 75 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு கட்டு முருங்கை, 10 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், கரூரில் உள்ள பெரும்பாலான ஹோட்டல்களில் முருங்கைக்காய், உணவு பொருட்களுக்கு அதிகளவில் சப்ளை செய்யப்படுகிறது.

### பயிற்சி முகாம்..

**மதுரை** : மதுரை மேற்கு வட்டார வேளாண்மை துறை சார்பில், பண்ணை பள்ளி பயிற்சி முகாம் நடந்தது.மூலக்குறிச்சி விவசாயி வெள்ளைச்சாமி பண்ணையில் நடந்த முகாமிற்கு, வேளாண் இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை தலைமை வகித்தார். உதவி இயக்குனர் செல்வன் முன்னிலை வகித்தார். கால்நடை மற்றும் பறவை வளர்ப்பு மூலம் கிடைக்கும் லாபம், மானியம் குறித்து கால்நடை டாக்டர்கள் சரவணன், முனியாண்டி விளக்கினர். சமயநல்லூர் முகாமில், மண்புழு உரம் தயாரிப்பு, வெளிச்சநத்தம் முகாமில், காளான் வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை அட்மா மேலாளர் காந்திமதி செய்திருந்தார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மெட்டாலாவில் தக்காளி விலை உயர்ந்தது

**நாமகிரிப்பேட்டை,** : நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட்டில் நேற்றைய காய்கறிகள் விலை விபரம்:

பெங்களூர் தக்காளி கிலோ ரூ8க்கு விற்பனையானது. நாட்டுத்தக்காளி ரூ8, கத்தரிக்காய் கிலோ ரூ15 வரை விற்பனையானது. வெண்டை கிலோ ரூ24, பச்சைமிளகாய் ரூ15, அவரைக்காய் ரூ20, பாவக்காய் ரூ15, முள்ளங்கி ரூ6, வெங்காயம் கிலோ ரூ16, பீர்க்கங்காய் கிலோ ரூ12, புடலை கி10, விற்பனையானது. பூசணி ரூ 5, நீர்பூசணி ரூ6க்கும் விற்பனையானது. சுரைக்காய் கிலோ ரூ6 க்கும் பீட்ரூட் ரூ14க்கும் மாங்காய் ரூ20 என விற்பனையானது. நேற்று மெட்டாலாவில் தக்காளி விலை கிலோவிற்கு ரூ4வரை உயர்ந்தது.

### வரத்து சரிவால் தக்காளி விலை உயர்வு பாலக்கோடு, : பாலக்கோடு மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்ந்துள்ளது.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் தினசரி காய்கறி மார்க்கெட் இயங்கி வருகிறது. இங்கு நேற்று நடந்த ஏலத்தில் தக்காளி வரத்து சரிந்தது. கடந்த வாரம் நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் கூடையாக இருந்த தக்காளி, நேற்றைய நிலவரப்படி சுமார் ஆயிரம் கூடையாக சரிந்தது.

இதனால், தக்காளி விலை உயர்ந்துள்ளது. 16 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி(சிறிய ரகம்) ரூ60 முதல் ரூ70 வரையிலும், பெரிய ரகம் ரூ70 முதல் ரூ120 வரையிலும், 25 கிலோ கொண்ட ஒரு பிளாஸ்டிக் பெட்டி ரூ100 முதல் ரூ150 விரையிலும் விற்பனை செய்யப்பட்டது. இதனால், கடந்த வாரம் ரூ4 முதல் ரூ6 வரையிலும் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளி, நேற்று ரூ6 முதல் ரூ8 வரையிலும் விலை உயர்ந்தது. கடந்த வாரங்களில் தக்காளி வரத்து அதிகரித்து இருந்தது. இதே போல் அனைத்து இடங்களிலும் வரத்து அதிகரித்து

காணப்பட்டதால் அங்கிருந்து வரக்கூடிய வியாபாரிகளின் எண்ணிக்கையும் குறைந்தது. இந்நிலையில், போதிய மழை இன்றி வறட்சி நிலவி வருவதால் பாலக்கோடு மார்க்கெட்டிற்கு வரத்து குறைந்துள்ளது.

இதே நிலை அனைத்து இடங்களிலும் காணப்படுகிறது. இதையடுத்து, பாலக்கோட்டிற்கு வரும் வியாபாரிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வியாபாரிகள் வரத்து அதிகரிப்பு, தக்காளி வரத்து குறைவின் காரணமாக விலையும் உயர்ந்து வருகிறது. முகூர்த்த நாட்களும் நெருங்கி வருவதால் தக்காளி விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோஸ் விலை சரிவு கிலோ ரூ2க்கு விற்பனை பாலக்கோடு தினசரி காய்கறி மார்க்கெட்டில் நேற்று நடந்த ஏலத்தில் முட்டை கோஸ் விலை சரிந்தது. வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ2க்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

மற்ற காய்கறிகளின் விலை நிரவரம் வருமாறு:

முள்ளங்கி கிலோ ரூ4 முதல் ரூ5 வரையிலும், பெல்ட் அவரை ரூ16, பாகற்காய் ரூ15, வெண்டைக்காய் ரூ13 முதல் ரூ16 வரையிலும், குண்டு கத்தரி ரூ7 முதல் ரூ8 வரையிலும், நீண்ட கத்தரி ரூ10க்கும் விற்பனை செய்யப்பட்டது. வெண்டைக்காய் வரத்து சீராக இருப்பதால் கடந்த ஒரு மாதமாகவே அதே விலையில் விற்பனை செய்யப்படுவதாக கூறினர்.

## சுட்டெரிக்கும் வெயில் தர்பூசணி பழம் விற்பனை அதிகரிப்பு

**கரூர்**, : கோடை வெயில் அதிகம் காரணமாக நகரின் பல்வேறு பகுதிகளில் தர்பூசணி பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் குறைந்த மழையளவு பெறும் ஒரு சில மாவட்டங்களில் கரூர் மாவட்டமும் ஒன்றாக உள்ளது. கடந்தாண்டு சராசரி மழையளவை விட மிகவும் குறைவான மழைதான் பெய்தது. மழை குறைவு காரணமாக கோடை வெயில் தற்போது உச்சத்தில் உள்ளது.

விழுப்புரம் மாவட்டம் மற்றும் புச்சேரி பகுதிகளில் தர்பூசணி பழம் அதிகம் விளைகின்றன. கரூர் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் அங்கிருந்து தர்பூசணி காய்களை வாங்கிவந்து கரூரில் விற்பனைச் செய்து வருகின்றனர். மழைக் குறைவு

காரணமாக இப்பகுதிகளில் தர்ப்பூசணி பழங்கள் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், நகரின் பல்வேறு பகுதிகளில் தர்ப்பூசணி பழங்கள் விற்பனை அதிகரிக்கத் துவங்கியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு கிலோ ரூ.5ல் இருந்து ரூ.8 வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்தாண்டு ஒரு கிலோ ரூ.10 முதல் 13 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்தாண்டு பெரும்பாலான பகுதிகளில் ஒரு கிலோ தர்பூசணி ரூ.15 வரை விற்கப்படுகிறது. வெயிலுக்கு இதமாகவும், அதிக மருத்துவக்குணம் போன்ற காரணங்களால் தர்ப்பூசணி பழங்களை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 7¾ லட்சம் புத்தகங்கள் குறுந்தகடுகளில் வெளியீடு**

**கோவை,**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில், 7¾ லட்சம் புத்தகங்கள் குறுந்தகடுகளில் வெளியிடப்பட்டு உள்ளது. கணினி மூலம் படித்து பயன்பெற ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

<u>புதுமை புகுத்தல் திட்டம்</u>

தேசிய வேளாண்மை புதுமை புகுத்தல் திட்டத்தின் கீழ், கணினி மயமாக்கப்பட்ட நூலகம் மற்றும் தகவல் மேலாண்மை வளமூட்டல் திட்டம், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நூலகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி 7 லட்சத்து 80 ஆயிரம் அரிய புத்தகங்களை, கணினி மூலம் படிக்கவும், எளிதில் கையாளும் வகையிலும் எண்ணியல் வடிவில் மாற்றப்பட்டு, குறுந்தகடுகளில்(சி.டி.) பதிவு செய்து வெளியிடப்பட்டு உள்ளது. தமிழ்நாடு

வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி குறுந்தகடுகளை வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:–

<u>இணைய புத்தகங்கள்</u>

பல லட்சம் மதிப்புள்ள இணைய புத்தகங்கள் மற்றும் மின்னணு தரவு தளங்களின் உறுப்பினராக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உள்ளது. இந்த வசதிகளை பயனுள்ள வகையில் மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

மாணவர்களும், விஞ்ஞானிகளும் பயன்படுத்தும் வகையில், பல்கலைக்கழக நூலகத்திற்கு 100 கணினிகள் வாங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. மாணவர்களும், விஞ்ஞானிகளும் ஆய்வு கட்டுரைகள் பலவற்றை எழுதி தங்களை மென்மேலும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும். மேலைநாடுகளை போல், நூலகம், வெளியீடுகள் மற்றும் மக்கள் தொடர்பு துறைகள் வேளாண் பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு, அனைத்து துறைகளும் பயன்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>வாசகரிடம் நூலகம்</u>

தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் வெளியீடுகள் மற்றும் மக்கள் தொடர்பு துறை சிறப்பு அலுவலர் ஆர்.விஜயராகவன் கூறும்போது, ‘நூலகத்திற்கு வாசகர்களை வரவழைப்பதைவிட, நூலகம் வாசகரிடம் போய் சேரும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது’ என்றார்.

விழாவில், புதுமை புகுத்தல் திட்டத்தின் தேசிய தலைவர் ஏ.கே.ஜெயின், பட்ட மேற்படிப்புத்துறை எஸ்.மோகன், வேளாண்மைத்துறை முதல்வர் எஸ்.மகிமைராஜா, வேளாண் பொறியியல் துறை முதல்வர் திவாகர் துரைராஜ் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் நூலகர் மு.சங்கர் நன்றி கூறினார்.

**விதிகளை மீறிய தனியார் விதை விற்பனை நிலைய உரிமம் ரத்து துணை இயக்குனர் நடவடிக்கை**

**விழுப்புரம்,**

விதிகளை மீறிய தனியார் விதை விற்பனை நிலையத்தின் உரிமத்தை விழுப்புரம் விதை ஆய்வு துணை இயக்குனர் ரத்து செய்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

விதிமீறல்

விழுப்புரம் விதை ஆய்வு துணை இயக்குனர் ஞானஒளி, செஞ்சியில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையங் களை திடீர் ஆய்வு மேற் கொண்டார். அப்போது தனியார் விதை விற்பனை யாளர் ஒருவர் உரிமம் இல்லாத இடத்தில் விற்பனை செய்ததும் உர மூட்டைகளை விதை மூட்டைகளுடன் சேர்த்து அடுக்கி விற்பனை செய்வதை யும், கொள்முதல் செய்த விதை களுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததும், உரிய பதி வேடுகள் முறையாக பரா மரிக்கப்படாததும், விற்பனை செய்த விதைகளுக்கு விவசாயி களிடம் ஒப்புதல் பெறாததும் கண்டறியப்பட்டது.

உரிமம் ரத்து

எனவே விதை கட்டுப்பாட்டு ஆணையின் விதிமுறைகளை மீறி விதை விற்பனை செய்த தனியார் நிலையத்தின் உரி மத்தை தற்காலிகமாக ரத்து செய்து துணை இயக்குனர் ஞானஒளி உத்தரவிட்டார்.

மேலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை விற்பனையாளர்களையும் விதை சட்டங்களின் அனைத்து விதிமுறைகளையும் கடை பிடிக்க கேட்டுக் கொண் டார். விவசாயிகளும் விதை வாங் கும்போது ரொக்கப் பட்டியலில் தங்களின் கையொப்பங் களை பதிவு செய்து பட்டியலை பெற்றுக் கொள்ளவும் அறிவுரை வழங்கினார்.